தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

மாற்றம்

விலை ரூ.15 மலர் 22 | இதழ் 8 டிசம்பர் 2020

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டம்

திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

டிசம்பர் 2020

அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,

அனைத்து துறைகளிலும் சாதனைகள் படைத்து மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக விளங்கும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களான உங்களுடன் முற்றம் இதழின் வாயிலாக மாதந்தோறும் எனது கருத்துக்களையும், எண்ணங்களையும் பகிர்ந்து கொள்வது எனக்கு பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது.

“ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே நம்மில்
ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வே”

என்ற வரிகளுக்கேற்ப, சுய உதவிக் குழுக்களாய் ஒன்றிணைந்து, பயிற்சிகள் பெற்று, சுய தொழில்கள் மேற்கொள்வதன் மூலம் அனைத்துத் துறைகளிலும் தங்களின் பங்களிப்பை செயல்படுத்தி வரும் நம் சுய உதவிக் குழு சகோதரிகள் தன்னலமற்று, பிறர் முன்னேற்றத்திலும் அக்கறை கொண்டு சமூக மேம்பாட்டு சாதனையாளர்களாக திகழ்கின்றனர். இதற்கு நம் சுய உதவிக் குழுவினர் தொடர்ந்து பெற்று வரும் வெற்றிகளும், பாராட்டுகளுமே சான்றுகளாய் உள்ளன.

தரணி போற்றும் தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் நன்னாளினை வரவேற்கும் விதமாக கொண்டாடப்படும் போகிப் பண்டிகையன்று பழைய பொருட்களை தீயிலிடும் பழக்கம் தொடர்கிறது. தேவையற்ற பொருட்களுடன், பிளாஸ்டிக் பொருட்கள், டயர் போன்றவற்றையும் தீயிட்டு எரிக்கும் நிகழ்வுகள் நடக்கின்றன. இதனால் ஏற்படும் புகையால் சுற்றுச்சூழல் பெரிதும் மாசு அடைகிறது. இதனைத் தவிர்க்கும் வகையில் போகிப் பண்டிகை சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத வகையில் கொண்டாடப்பட வேண்டும். சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை அனைத்து தரப்பினருக்கும் உணர்த்தும் ஓர் உன்னத பணியில் நம் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

உலகிற்கே உணவளிக்கும் உழவர்களையும், அவர்களுக்கு உதவியாக விளங்கும் கால்நடைகளையும் சிறப்பிக்கும் வகையில் கொண்டாடப்படும் தைப்பொங்கல் நன்னாள் தமிழர்களின் தனிப்பெரும் விழாவாக உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. `தை பிறந்தால் வழி பிறக்கும்” என்ற முதுமொழிக்கேற்ப அனைத்து தரப்பினரின் வாழ்விலும் உற்சாகத்தையும், உன்னத மாற்றத்தையும் ஏற்படுத்தும் பண்டிகையாக கொண்டாடப்படும் தைப்பொங்கல் திருநாளினை அனைவரும் சிறப்பாகக் கொண்டாடி மகிழ்வோமாக.

கூட்டுக் குடும்ப கலாச்சாரம் குறைந்து வரும் இக்காலகட்டத்தில், குடும்பத்தினர் அனைவரையும் ஒருங்கிணைப்பது பண்டிகைகள்தான். “திரைகடலோடியும் திரவியம் தேடும்” நாம் இதுபோன்ற பண்டிகைகளில் ஒன்றிணைய வேண்டும். நம் சுற்றத்தாரிடம் நல் உறவினையும், சகோதரத்துவத்தையும் வளர்த்துக் கொண்டு, அரசின் வழிகாட்டுதல்படி கொரோனா வைரஸ் பரவாத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கடைப்பிடித்து இப்பண்டிகைகளைக் கொண்டாடி மகிழ்வோம்.

முன்னதாக, புதியதாய் பிறக்கவுள்ள 2021 ஆங்கிலப் புத்தாண்டையும் நாம் வாழ்த்தி வரவேற்போம். இந்த இனிய தருணத்தில் கடந்த கால இடர்பாடுகளையும், இன்னல்களையும் களைந்து, ஆனால் அவற்றில் இருந்து பாடங்கள் கற்றுக் கொண்டு இப்புத்தாண்டில் வரவிருக்கும் நம் தமிழர் திருநாளில் மகிழ்ச்சியும், இன்பமும் பொங்க எல்லா வளமும் பெற்று சிறப்புடன் வாழ எனது சகோதரிகளான உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் 2021 புத்தாண்டு மற்றும் தமிழர் திருநாள் நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

மீண்டும் சந்திப்போம்.

அன்புடன்,

மேலாண்மை இயக்குநர்

குறளும்-பொருளும்

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு

நாம் சொல்ல வேண்டியவற்றை எளிய முறையில், கேட்போரின் மனதில் பதியுமாறு சொல்லிப் பிறர் சொல்லும் நுட்பமான கருத்துகளையும் ஆராய்ந்து தெளிவதே அறிவாகும்.

உள்ளடக்கம்...

மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டம்	05
நடமாடும் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மைய வாகனம் துவக்கம்	10
மதி சந்தை துவக்க விழா மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் கடைகள் திறப்பு விழா	11
கோவிட்—19 தடுப்பு உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி	13
தரணி போற்றும் தமிழர் திருநாள்	19
தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் ஆய்வு	21
முற்றக் கச்சேரி	25
மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம்	27
சத்தும், சுவையும் நிறைந்த வெஜிடபிள் ஊத்தாப்பம் (சமையல் குறிப்பு)	33

இன்பாக்ஸ்

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

protncdw1@gmail.com

முற்றம் வாசகர்களுக்கு ஓர் முக்கிய அறிவிப்பு

அச்சு மற்றும் வெளியீட்டு செலவினங்கள் அதிகரித்துள்ள காரணத்தினாலும், தற்போது மாறிவரும் சூழலுக்கேற்ப முற்றம் இதழை புதிய தொழில்நுட்ப வடிவில் மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ள காரணத்தினாலும் சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியாக விளங்கி வரும் நமது முற்றம் இதழின் விற்பனை விலை மற்றும் ஆண்டு சந்தா கட்டணங்கள் ஜனவரி 2021 முதல் கீழ்கண்டவாறு மாற்றம் செய்யப்பட உள்ளது என்பதை அனைத்து முற்றம் வாசகர்களுக்கும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

முற்றம் இதழின் தனிப்பிரதி / சந்தா விபரம்	தற்போதைய விலை	ஜனவரி 2021 முதல் மாற்றம் செய்யப்படவுள்ள புதிய விலை	ஜனவரி 2021 முதல் முற்றம் வாசகர்களுக்கான சலுகை விலை
முற்றம் இதழின் தனிப்பிரதி	ரூ. 15	ரூ. 20	ரூ. 20
ஒரு ஆண்டு சந்தா	ரூ. 180	ரூ. 240	ரூ. 200 (தள்ளுபடி ரூ. 40)
இரண்டு ஆண்டு சந்தா	ரூ. 360	ரூ. 480	ரூ. 400 (தள்ளுபடி ரூ. 80)
மூன்று ஆண்டு சந்தா	ரூ. 540	ரூ. 720	ரூ. 600 (தள்ளுபடி ரூ. 120)

முற்றம் இதழின் வாசகர்கள் அளித்து வரும் தங்களின் ஆதரவினை இவ்விதழுக்குத் தொடர்ந்து வழங்கி உற்ற தோழியாய், உறுதுணையாய் என்றும் இருக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

– முற்றம் இதழ்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம்

மலர் 22
இதழ் 8
டிசம்பர் 2020
விலை ரூ.15

கௌரவ ஆசிரியர்கள்	**திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப.,** மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
	முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., செயல் இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தலைமை செயல் அலுவலர் (பொ), தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்	**எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்
ஆசிரியர் குழு	**ஜா. சம்பத்,** கூடுதல் இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
	ஜே. கணேஷ் கண்ணா, கூடுதல் இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
	கே. சுமதி, கூடுதல் இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
	எஸ். சாமுவேல் இன்பதுரை, கூடுதல் இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
	கோ. லட்சுமிபதி, கூடுதல் இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
நிர்வாக ஆசிரியர்	**ரா. ஜீவா,** பொது மேலாளர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
நிதி நிர்வாகம்	**சு. இராமலெட்சுமி,** நிதி ஆலோசகர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்	**எஸ். விஜயலட்சுமி,** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
துணை ஆசிரியர்	**ஏ. கண்ணன்**
முதுநிலை கணக்காளர்	**சு. சசிகலா**
பிழை திருத்துபவர்	**எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
கணினி வடிவமைப்பு	**ஆ. சுரேஷ் பாபு**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், ‘முற்றம்’, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413
தொலைநகல் : 044 2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

ஆசிரியரிடமிருந்து...

முன்னெச்சரிக்கை தரும் நன்மை...

அன்புள்ள வாசகர்களுக்கு

தமிழகத்தின் வடமாவட்டங்களில் நிவர் புயல் அச்சுறுத்தியதை நாம் யாவரும் அறிவோம். இந்த புயல் மனித உயிர்களுக்கு ஆபத்தை விளைவிக்காமலும், மிகப்பெரிய அளவில் சேதம் ஏற்படுத்தாமலும் கடந்து சென்றது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

புயல் வருவதற்கு முன்பாக அரசு மேற்கொண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பிற்கான தயார் நிலை ஆகியவைகள் பாராட்டுக்குரியன. பேரிடர் மீட்புக் குழுவினர், தீயணைப்புத் துறையினர், காவல் துறையினர், சுகாதாரத் துறையினர், உள்ளாட்சி துறையினர், மின்சாரத் துறையினர் ஆகியோரை வருவாய் மற்றும் பேரிடர் துறை ஒருங்கிணைத்து கண்காணித்ததோடு, பாதிப்புக்குள்ளாகும் பகுதியிலுள்ள மக்களை பாதுகாப்பான இடங்களில் தங்க வைத்து அவர்களுக்கு உணவு மற்றும் மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்பட்டது வரவேற்கக் கூடிய ஒன்றாகும்.

இதுபோன்ற நடவடிக்கைகளால் பெரும் பாதிப்புகள் தவிர்க்கப்பட்டன. இந்தப் புயல் காற்றினால் ஒரு சில இடங்களில் மின்மாற்றிகளும், சில இடங்களில் மரங்களும், விவசாய பயிர்களும் பாதிக்கப்பட்டதே தவிர மனிதர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 15 ஆண்டுகளில் தமிழகத்தை 30 புயல்கள் தாக்கி உள்ளதாக செய்திகள் கூறுகின்றன. கடந்த 15 ஆண்டுகளில் அபர்னஸ், நிஷா, தானே, நீலம், வர்தா, ஒக்கி, கஜா மற்றும் நிவர் ஆகிய புயல்கள் தமிழகத்தை தாக்கி உள்ளன. அதோடு சுனாமி மற்றும் வெள்ளம் ஆகிய பேரிடர்களும் பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தி உள்ளன.

எனவே, வரும் காலங்களிலும் பேரிடர்களை எதிர்கொள்ள வேண்டிய அவசியம் உருவாகி உள்ளதால் அரசின் நடவடிக்கைகளுக்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியமான ஒன்றாகும். இயற்கை பேரிடரை தடுக்க முடியாது. ஆனால், பேரிடரால் ஏற்படும் பாதிப்புகளையும் சிரமங்களையும் குறைத்துக் கொள்ள முடியும்.

இப்படிக்கு,

(எஸ்.சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்

மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 04.12.2020 அன்று மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில், பயனாளிகளுக்கு அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. செல்லூர் கே. ராஜூ, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி, மாண்புமிகு வருவாய், பேரிடர் மேலாண்மைத்துறை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு. ஆர். பி. உதயகுமார், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், நகராட்சி நிர்வாக ஆணையர் டாக்டர் கே. பாஸ்கரன், இ.ஆ.ப., மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. த. அன்பழகன், இ.ஆ.ப., மதுரை மாநகராட்சி ஆணையர் திரு. ச. விசாகன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 19.11.2020 அன்று சேலம் மாவட்டம், வனவாசி, அரசினர் பலவகை தொழில்நுட்ப கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற விழாவில், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன், மாண்புமிகு உயர்கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. கே. பி. அன்பழகன், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சி.அ. ராமன், இ.ஆ.ப., தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியின் தலைவர் திரு. ஆர். இளங்கோவன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

வெள்ள நீர் வடிவதற்கான திட்டங்கள் குறித்த வரைபடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 30.11.2020 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி, பள்ளிக்கரணை, சதுப்பு நிலப்பகுதியில் வெள்ள நீர் வடிவதற்கான திட்டங்கள் குறித்த வரைபடங்களை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். உடன் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி, மாண்புமிகு வருவாய், பேரிடர் மேலாண்மைத்துறை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு. ஆர். பி. உதயகுமார், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

மழைநீர் தங்குதடையின்றி வடிவதற்காக முகத்துவாரத்தினை தூர்வாரும் பணியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிடுதல்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 30.11.2020 அன்று செங்கல்பட்டு மாவட்டம், முட்டுக்காட்டில் நிவர் புயல் காரணமாக ஏற்பட்ட கனமழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மழைநீர் தங்குதடையின்றி வடிவதற்காக முகத்துவாரத்தினை தூர்வாரும் பணியினை பார்வையிட்டார்கள். உடன் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி, மாண்புமிகு வருவாய், பேரிடர் மேலாண்மைத்துறை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சர் திரு. ஆர். பி. உதயகுமார், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் மகளிர் சுய உதவிக் குழுவினருடன் கலந்துரையாடல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 10.11.2020 அன்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜூ, புதுடெல்லிக்கான தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி திரு. என். தளவாய் சுந்தரம், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா. அரவிந்த், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தலைமையில் 10.11.2020 அன்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுவினருடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜூ, புதுடெல்லிக் கான தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி திரு. என். தளவாய் சுந்தரம், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா. அரவிந்த், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 11.11.2020 அன்று தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், சட்டமன்ற உறுப்பினர்கள், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 11.11.2020 அன்று தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், தூத்துக்குடி மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுவினரால் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்கினைப் பார்வையிட்டார்கள். உடன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு, சட்டமன்ற உறுப்பினர்கள், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தலைமையில் 11.11.2020 அன்று விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுவினருடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜூ, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு. கே. டி. ராஜேந்திரபாலாஜி, சட்டமன்ற உறுப்பினர்கள், விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இரா. கண்ணன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 04.12.2020 அன்று சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கு இருசக்கர வாகனங்களை வழங்கினார்கள். உடன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு வருவாய், பேரிடர் மேலாண்மைத்துறை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு. ஆர். பி. உதயகுமார், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் திரு. ஜி. பாஸ்கரன், சட்டமன்ற உறுப்பினர்கள், சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ப. மதுசூதன் ரெட்டி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

நடமாடும் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மைய வாகனம் துவக்கம்

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் நடமாடும் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மைய வாகனத்தை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் 24.11.2020 அன்று ரிப்பன் மாளிகை வளாகத்தில் இருந்து கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு. கோ. பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திரு. ஜெ. மேகநாத ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள், தலைமைப் பொறியாளர் (பொது) திரு. எல். நந்தகுமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மழை நிவாரண பணிகள் ஆய்வு

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் 26.11.2020 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலத்திற்கு உட்பட்ட வார்டு 138ல் உள்ள பாரதிதாசன் காலனியில் பொக்லைன் இயந்திரம் மூலம் மழை நீர் வெளியேற்றப்படுவதை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு. கோ. பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திரு. ஜெ. மேகநாத ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் திரு. வி. என். ரவி, மண்டல அலுவலர் உட்பட அலுவலர்கள் பலர் உடன் இருந்தனர்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலத்திற்கு உட்பட்ட வார்டு 172ல் உள்ள ஏ.எம்.எம். பள்ளியில் உள்ள மாநகராட்சி நிவாரண முகாமை 26.11.2020 அன்று பார்வையிட்டு, தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு உணவு, உடை போன்ற தேவையான அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு. கோ. பிரகாஷ், இ.ஆ.ப., துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திரு. ஜெ. மேகநாத ரெட்டி, இ.ஆ.ப., வட்டார துணை ஆணையாளர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ், இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர் திரு. வி. என். ரவி மற்றும் மண்டல அலுவலர் உட்பட பலர் உடன் இருந்தனர்.

மதி சந்தை துவக்க விழா மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் கடைகள் திறப்பு விழா

கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் செயல்படும் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை சந்தைப்படுத்திடும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்க கடைகளையும், அவ்வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மதி சந்தையையும் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி, அவர்கள் 29.11.2020 அன்று திறந்து வைத்து விற்பனையை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கு. இராசாமணி, இ.ஆ.ப., கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் திரு. பி. குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., கோயம்புத்தூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. கு. செல்வராசு, துணை ஆணையாளர், உதவி திட்ட அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்த மதி சந்தை மற்றும் கடைகளில் இயற்கை காய் கனிகள், சமையல் எண்ணெய்கள், மூலிகைப் பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள், மென் பொம்மைகள், செயற்கை நகைகள், உணவு பொருட்கள், மசாலா பொடிகள், கைத்தறி மற்றும் ஆயத்த ஆடைகள், தின்பண்டங்கள், துணி மற்றும் சணல் பைகள், மூங்கில் மற்றும் வயர் கூடைகள், நாட்டு கோழி முட்டைகள் மற்றும் மூங்கில் பொருட்கள் போன்ற பல்வேறு வகையான பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

தூத்துக்குடி மாவட்டம் ஸ்டார் பேப்பர் பிளேட் உற்பத்தி அலகு திறப்பு விழா

தூத்துக்குடி மாவட்டத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் செயல்படுத்தப்படும் ஸ்டார் பேப்பர் பிளேட் உற்பத்தி அலகினை மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு கடம்பூர் ராஜூ அவர்கள் 05.11.2020 அன்று துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஸ்ரீவைகுண்டம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். பி. சண்முகநாதன் அவர்கள், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள், தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி பி.ஜே. ரேவதி அவர்கள், மாநகராட்சி உதவி ஆணையாளர், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர் திருமதி எஸ். பிரேமா, அலுவலகப் பணியாளர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இந்த பேப்பர் பிளேட் உற்பத்தி அலகானது தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் கனிமம் மற்றும் சுரங்கத்துறை நிதி உதவியான ரூ.26.50 இலட்சம் மதிப்பீட்டில், ஸ்டார் பகுதி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினராக இணைந்துள்ள ஸ்டார் சுய உதவிக் குழுவின் மூலம் செயல்படுத்தப்படவுள்ளது.

மகளிர் திட்டம் / தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்குதல் — திருப்பூர் மாவட்டம்

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, உடுமலைப்பேட்டை தேஜஸ் மஹால் திருமண மண்டபத்தில், மகளிர் திட்டம் / தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் 217 பயனாளிகளுக்கு ரூ. 1.78 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன் அவர்கள் 04.12.2020 அன்று வழங்கினார். உடன் திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் க. விஜயகார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. கு. சரவணமூர்த்தி, திருப்பூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. கோமகன் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

கோவிட்-19 தடுப்பு உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி

சென்னை, நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன கூட்டரங்கில் 30.11.2020 அன்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப. அவர்கள் தலைமையில், **"கோவிட் 19 தடுப்பு உறுதிமொழி"** ஏற்கப்பட்டது. இந்நிகழ்வில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் இயக்குநர்கள் திரு. ஜா. சம்பத், திரு. ஜே. கணேஷ் கண்ணா, திருமதி கே. சுமதி, திரு. எஸ். சாமுவேல் இன்பதுரை, பொது மேலாளர் திருமதி. ரா ஜீவா, இணை இயக்குநர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

தென்காசி மாவட்டம்

தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கங்களின் செயல்பாடுகள் ஆய்வு

தென்காசி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கங்களின் செயல்பாடுகளை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., அவர்கள் 13.12.2020 அன்று ஆய்வு செய்தார். ஆய்வின் தொடக்கமாக கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உள்ள வட்டார இயக்க மேலாண்மை அலகில் சுய உதவிக் குழுவினருடன் மேலாண்மை இயக்குநர் அவர்கள் கலந்துரையாடினார். தென்காசி மாவட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் ஜி. எஸ். சமீரன், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலின் போது தென்காசி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி பா. விஜயலெட்சுமி மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், சுய உதவிக் குழு பயிற்றுனர்கள் மற்றும் களப் பணியாளர்கள் உடனிருந்தனர். இந்நிகழ்வின் போது தென்காசி, கீழப்பாவூர், கடையம், செங்கோட்டை மற்றும் ஆலங்குளம் வட்டாரங்களை சேர்ந்த மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் உற்பத்தி செய்த பொருட்களான மண்பாண்டங்கள், பனை ஓலைப்பொருட்கள், நர்சரி பூங்கன்றுகள், பல வண்ண கோலப்பொடிகள், ஆயத்த ஆடைகள், உணவுப் பொருட்கள், பிரம்பினாலான வீட்டு உபயோகப் பொருட்கள், தேன், வீட்டு அழகு பொருட்கள், இலவம் பஞ்சு தலையணைகள் ஆகியவற்றை மேலாண்மை இயக்குநர் அவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் பார்வையிட்டு அப்பொருட்கள் குறித்த விபரங்களைக் கேட்டறிந்தனர்.

தூத்துக்குடி மாவட்டம்

தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கங்களின் செயல்பாடுகள் ஆய்வு

தூத்துக்குடி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கங்களின் செயல்பாடுகளை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., அவர்கள் 13.12.2020 அன்று ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை ஊராட்சியில் திருநங்கைகள் சுய உதவிக் குழுக்கள் மூலம் நடத்தப்படும் சேலஞ்ச் பாக்கு மரத் தட்டு அலகினை பார்வையிட்ட மேலாண்மை இயக்குநர் அவர்கள் உற்பத்தியினை மேம்படுத்துவது தொடர்பான ஆலோசனை வழங்கினார். இந்நிகழ்வின் போது தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் கே. செந்தில் ராஜ், இ.ஆ.ப., அவர்கள், தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி பி. ஜே. ரேவதி மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

திருநெல்வேலி மாவட்டம்

திருநெல்வேலி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கங்களின் செயல்பாடுகளை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., அவர்கள் 12.12.2020 அன்று ஆய்வு செய்தார். ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கங்களின் மூலம் மேற்கொள்ளப்படும் திட்டங்களின் நிலை, புரட்சித் தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டுத் திட்டம், அம்மா இருசக்கர வாகன மானியத் திட்டம் உள்ளிட்ட திட்டங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்த மேலாண்மை இயக்குநர் அவர்கள், நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படும் சுய உதவிக் குழுக்கள் தயாரித்த பனை ஓலைப் பொருட்களைப் பார்வையிட்டு அதன் தயாரிப்பு மற்றும் விற்பனை குறித்த விபரங்களை சுய உதவிக் குழுவின் உறுப்பினர்களிடம் கேட்டறிந்து மேலும் சிறப்பாக செயல்பட உரிய ஆலோசனைகளை வழங்கினார். இந்த ஆய்வின் போது திருநெல்வேலி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. மைக்கேல் அந்தோனி பெர்னாண்டோ, உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் உடனிருந்தனர்.

தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கங்களின் செயல்பாடுகள் ஆய்வு

கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கங்களின் செயல்பாடுகளை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., அவர்கள் 12.12.2020 அன்று ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கங்களின் செயல்பாடுகள், மேற்கொள்ளப்பட்ட திட்டங்களின் நிலை, அடைந்துள்ள முன்னேற்றம் போன்றவற்றை ஆய்வு செய்த மேலாண்மை இயக்குநர் அவர்கள், திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திட உரிய ஆலோசனைகளை வழங்கினார். பின்னர் நாகர்கோவில் நகராட்சிப் பகுதியில் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படும் சுய உதவிக் குழுவின் கால் மிதியடி(Mat) உற்பத்தி அலகினைப் பார்வையிட்ட மேலாண்மை இயக்குநர் அவர்கள் அலகின் செயல்பாடுகள் குறித்த விபரங்களைக் கேட்டறிந்தார். இந்த நிகழ்வுகளின் போது கன்னியாகுமரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் திரு. வே. பிச்சை மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் புரெவி புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் ஆய்வுகள்

கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்பட்டணம் துறைமுகப் பகுதியில், 02.12.2020 அன்று கன்னியாகுமரி மாவட்ட கண்காணிப்பாளர் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., அவர்கள், புரெவி புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கடல் நீர் தேங்கும் பகுதிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். இவ்ஆய்வின் போது, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா. அரவிந்த், இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. வெ. பத்ரி நாராயணன், இ.கா.ப., மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கங்களின் செயல்பாடுகள் ஆய்வு

இராமநாதபுரம் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை 08.12.2020 அன்று தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல் இயக்குநர் முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார். ஆய்வின் முதல் கட்டமாக உதவித் திட்ட அலுவலர்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்த செயல் இயக்குநர் அவர்கள், கடலாடி வட்டார இயக்க மேலாண்மை அலகின் சமுதாய சுய உதவிக்குழு பயிற்றுநர்கள் மற்றும் கணக்காளர்களிடையே கலந்துரையாடல் மேற்கொண்டார்.

தொடர்ந்து செயல் இயக்குநர் அவர்கள், கடலாடி வட்டாரத்தைச் சேர்ந்த இதம்பாடல் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அலுவலகத்தை பார்வையிட்டு பதிவேடுகள் ஆய்வு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்களிடம் கலந்துரையாடல் மேற்கொண்டு, கூட்டமைப்பு மேலும் சிறப்பாக செயல்பட ஆலோசனை வழங்கியதுடன், இதம்பாடல் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பைச் சேர்ந்த 2 சுய உதவிக் குழுக்களுக்கு அமுதசுரபி நிதியிலிருந்து ரூபாய் இரண்டு லட்சம் கடனாக வழங்கினார்.

பின்னர் மண்டபம் வட்டாரத்தைச் சேர்ந்த நொச்சியூரணி கிராமத்தைச் சேர்ந்த மல்லிகைச் செடி பதியன் செய்யும் விவசாய உற்பத்தியாளர் அமைப்பைப் பார்வையிட்ட செயல் இயக்குநர் அவர்கள் நொச்சியூரணி மற்றும் தங்கச்சிமடம் மல்லிகைப் பதிய நாற்றுகள் சிறப்பான இடத்தைப் பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் இராமநாதபுரம் நகராட்சியைச் சேர்ந்த கருமாரியம்மன் சுய உதவிக் குழுவிற்கு வங்கிக் கடனாக ரூ.20 லட்சத்திற்குரிய காசோலைகளை வழங்கிய செயல் இயக்குநர் அவர்கள், தமிழ்நாடு மாநில நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் இராமநாதபுரம் நகராட்சியில் PMSVANidhi திட்டத்தின் கீழ் பயன் பெற்ற 2 நடைபாதை வியாபாரிகளை அவர்கள் வியாபாரம் செய்யும் இடத்திற்கே சென்று திட்ட பயன்பாடு குறித்து கேட்டறிந்ததுடன், ஆய்வின் நிறைவாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை சந்தித்து ஆய்வு குறித்து கலந்துரையாடினார்.

நாகப்பட்டினம் மாவட்டம்

வேளாண் இயந்திர வாடகை மையம் திறப்பு

நாகப்பட்டினம் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் கீழையூர் வட்டாரம், திருப்பூண்டி மேற்கு ஊராட்சியில் வேளாண் இயந்திர வாடகை மையத்தினை (Custom Hiring Centre) நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., அவர்கள் 18.11.2020 அன்று துவக்கி வைத்து, மையத்தை சிறப்பாக செயல்படுத்திட ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கு பல்வேறு ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நாகப்பட்டினம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. எஸ். பி. பாலமுருகன், உதவித் திட்ட அலுவலர் திரு. ஆர். செல்வகணபதி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள், திட்டப் பணியாளர்கள் மற்றும் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த பெண் விவசாயிகள் மட்டுமல்லாது அனைத்து விவசாயிகளும் நவீன வேளாண்மையில் ஈடுபட்டு அதிக பயன் பெறும் வகையில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் மூலம் செயல்படுத்திடும் வகையில் அமைக்கப்பட்டுள்ள வேளாண் இயந்திர வாடகை மையங்களுக்குத் தேவையான இயந்திரங்கள் மகளிர் திட்டம் மூலம் ரூ.1.50 லட்சமும், வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் மத்திய அரசு வழங்கும் மானியம் ரூ. 8 லட்சமும், கூட்டமைப்புகளின் பங்களிப்பு ரூ. 50 ஆயிரமும் சேர்ந்து ரூ. 10 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கப்படுகின்றன. இதன் மூலம் வேளாண் இயந்திரங்களை குறைந்த வாடகை செலுத்தி விவசாயிகள் பயன்படுத்த முடியும். மேலும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளும் இந்த மையங்கள் மூலம் வருவாய் பெற முடியும்.

அம்மா ஸ்கூட்டர் திட்டம்

வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு
நாளும் பயணம் இனிதாக
வந்தது அற்புதத் திட்டம் – அது
அம்மா ஸ்கூட்டர் திட்டம்.

பேருந்தில் ஏறிக் கூட்டத்தில்
நெரிசல், அலைச்சலில் அவதிப்பட்டு
பணியிடம் செல்லும் போதெல்லாம்
பயத்துடன் சென்றது பழைய கதை.

அரசு தருகின்ற மானியத்துடன்
அழகிய அம்மா ஸ்கூட்டர் ஒன்றை
விலைக்கு வாங்கித் தவணையிலே
தொகையைத் திருப்பிச் செலுத்திடலாம்.

ஸ்கூட்டர் ஒன்று உம் சொந்தம் – இனி
வேலைக்குச் செல்வது நல் இன்பம்
வீட்டில் இருந்து பணியிடம் வரையில்
பயணம் என்பது பெரும் சொர்க்கம்.

மகளிர் வளர்ச்சிக்குத் திட்டங்கள்
பற் பல தந்தது அரசாங்கம்
அதிலே சிறப்புத் திட்டம் என
அம்மா ஸ்கூட்டர் வந்ததம்மா!

ஏழை எளியோர் வீட்டினிலே
பணிக்குச் செல்லும் பல மகளிர்
வாழ்வில் வளம் பெற வந்ததிந்த
அம்மா ஸ்கூட்டர் நல் திட்டம்.

உழைக்கும் மகளிர் யாவருக்கும்
உற்சாகம் தருகின்ற இத்திட்டம்
குறைந்த வருவாய் பெறுவோரின்
குறைகளை நீக்கும் பெருந்திட்டம்.

கடைகள், வணிக நிறுவனத்தில்
பணியினைச் செய்கின்ற பெண்களுடன்
தனியாய்ச் சுயதொழில் செய்வோரும்
தகுதியுடன் ஸ்கூட்டர் வாங்கிடலாம்.

மகளிர் திட்டப் பணியாளர்
மருத்துவத் துறையின் பணியாளர் – என
அரசு விதித்த விதிகளுக்குள்ளே
வருகின்ற மகளிரும் வாங்கிடலாம்.

உழைக்கும் மகளிர் வீட்டினிலே
அம்மா ஸ்கூட்டர் ஒன்றிருந்தால்
பிழைப்புக்காக அலைகின்றோம்
என்ற புலம்பல் இருக்காது.

கரும்பு தின்னக் கூலிபோல்
மானியம் அரசு வழங்குவதால்
விரும்பி இதனை வாங்கிடுவீர்!
பணியில் மகிழ்ந்திடுவீர்!

ஜா.சம்பத்
கூடுதல் இயக்குநர் (திறன் வளர்ப்பு)
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

கிருஷ்ணகிரி மாவட்டம்

வேளாண் இயந்திர வாடகை மையத்தின் செயல்பாடுகள் மற்றும் அம்மா விபத்து காப்பீடு திட்டம் பதிவேற்றும் பணிகள் ஆய்வு

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், சிங்காரப்பேட்டை ஊராட்சியில் மகளிர் திட்டம் மற்றும் வேளாண்மை பொறியியல் துறை பங்களிப்புடன் சிங்காரப்பேட்டை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் செயல்படுத்தப்படும் வேளாண் இயந்திர வாடகை மையத்தின் செயல்பாடுகள் மற்றும் மகளிர் திட்டத்தின் மூலம் ஊத்தங்கரை வட்டாரத்தில் செயல்படுத்தப்படும் அம்மா விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டு திட்ட படிவம் பதிவேற்றம் செய்யும் பணி ஆகியவற்றை கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் ஜெயச்சந்திர பானுரெட்டி, இ.ஆ.ப., அவர்கள் 19.11.2020 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வுகளின் போது கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஈ. ஈஸ்வரன், உதவி திட்ட அலுவலர் திரு.வே.பிரபாகரன், வேளாண் பொறியியல் துறை அலுவலர்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்கள் உடனிருந்தனர்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பெருங்கடன் வழங்குதல்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். சிவராசு, இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் 02.12.2020 அன்று அனைத்து வங்கியாளர்களின் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஆர். சங்கர், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு. ஜி. சத்ய நாராயணன், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர் திரு. ஏ. ஜான்பால் ஆண்டனி, திருச்சி மத்திய மாவட்ட கூட்டுறவு வங்கியின் உதவி பொது மேலாளர் திருமதி ஆர்.ஹேமலதா மற்றும் அனைத்து வங்கிகளின் ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், பொன்னுசங்கம்பட்டி ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக்கு கண்ணனூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மூலமாக ரூ.14,85,000/-மும், பகளவாடி ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக்கு சிங்களாந்தபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மூலமாக ரூ. 44,10,000/- பெருங்கடனும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் வழங்கப்பட்டது.

தரணி போற்றும் தமிழர் திருநாள்

தமிழ் மாதங்களில் தனிச் சிறப்பு வாய்ந்தது தை மாதமாகும். "**தை பிறந்தால் வழி பிறக்கும்**" என்பார்கள். தை மாதத்தின் பிறப்பை அறுவடைத் திருநாளாக, பொங்கல் தினமாக உலகத் தமிழினம் கொண்டாடி வருகிறது.

தமிழர் திருநாள், தைப் பொங்கல், அறுவடைத் திருநாள் என கூறப்படும் பொங்கல் பண்டிகை, தமிழர் பண்டிகை ஆகும். பொங்கல் என்பதற்கு சாப்பிடும் பொங்கல் என்று பொருள் அல்ல. பொங்கிப் பெருகி வருவது என்று பொருள். தமிழர்கள் இருக்குமிடமெல்லாம் பொங்கல் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. தமிழர்களின் தாயகமான தமிழ்நாட்டில் வெகு விமரிசையாக கொண்டாடப்படும் பொங்கல் பண்டிகை, மலேசியா, கனடா, சிங்கப்பூர், இலங்கை, மொரீஷியஸ் உள்ளிட்ட பல்வேறு உலக நாடுகளிலும் கூட விமரிசையாக கொண்டாடப்படுவது வழக்கம்.

பொங்கல் பண்டிகை மொத்தம் மூன்று நாட்களுக்கு கொண்டாடப்படுகிறது. முதல் நாள் போகி பண்டிகை. அடுத்த நாள் பொங்கலிடும் நாள். 3வது நாள் மாட்டுப் பொங்கல். நமக்கு காலமெல்லாம் கை கொடுத்து உதவும் மழை, கதிரவன், விவசாயத்திற்குப் பயன்படும் கால்நடைகள் ஆகியவற்றுக்கு நன்றி கூறும் நல் வாய்ப்பாக இந்த திருநாள் கொண்டாடப்படுகிறது.

போகி பண்டிகை

பொங்கல் திருநாளின் முதல் நிகழ்வான போகி பண்டிகையன்று, அதிகாலையில், அனைவரும் எழுந்து குளித்து, வீட்டில் உள்ள தேவையற்ற, பழைய பொருட்களை வீட்டின் முன்பு வைத்து தீயிட்டு கொளுத்துவார்கள். "அல்லவை அழிந்து நல்லவை வரட்டும்", பழையன கழிதலும், புதியன புகுதலும்'' என்ற மொழிக்கேற்ப போகி பண்டிகை கொண்டாடப்படுகிறது.

வீட்டுப் பொங்கல்

2ஆவது நாளான பொங்கல் விசேஷமானது. தை மாதப் பிறப்பு நாள் இது. புதுப்பானையில், மஞ்சள் உள்ளிட்டவற்றை சுற்றிக் கட்டி, புதுப் பாலில், புது அரிசியிட்டு, வெல்லம் உள்ளிட்டவற்றைக் கலந்து பொங்கலிடுவார்கள். வீட்டுக்கு வெளியே சூரியன் இருக்கும் திசையை நோக்கி இந்த பொங்கலிடும் நிகழ்ச்சி நடைபெறும். அரிசி நன்கு சமைந்து, பொங்கி வரும்போது குலவையிட்டும், "பொங்கலோ பொங்கல், பொங்கும் மங்கலம் எங்கும் தங்குக" என்ற குரலோடு பொங்கல் பானையை இறக்க வேண்டும். பொங்கல் நன்கு பொங்கி வந்தால் அந்த ஆண்டு முழுவதும் நல்ல வளமும், நலமும் நிலவும் என்பது ஐதீகம்.

மாட்டுப் பொங்கல்

3வது நாள் விழா மாட்டுப் பொங்கல். கிராமங்கள்தோறும் மாட்டுப் பொங்கல் விமரிசையாக கொண்டாடப்படும். மாடுகள், பசுக்களின் கொம்புகளுக்கு புது வர்ணம் பூச்சி, நன்கு குளிப்பாட்டி, அவற்றை அலங்காரம் செய்து, மாட்டுப் பொங்கல் தினத்தின்போது படையலிட்டு வழிபாடு செய்வார்கள். பின்னர் மாடுகளுக்கு பொங்கலும் அளிக்கப்படும். ஆண்டெல்லாம் நமக்காக உழைக்கும் மாடுகளுக்கு நன்றி கூறும் தினமாக இது கொண்டாடப்படுகிறது. அன்றைய தினத்தின்போது மாடுகளுக்கு ஒரு வேலையும் தர மாட்டார்கள். கழுத்தில் புது மணி கட்டி, கொம்புகளை சீவி விட்டு சுதந்திரமாக திரிய விடுவார்கள். மாட்டுப் பொங்கலின்போது கிராமங்கள் தோறும் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகள் நடைபெறுவது வழக்கம். இதுதவிர நான்காவது நாள் காணும் பொங்கலாக வட

மாவட்டங்களில் கொண்டாடப்படுகிறது. அதாவது உற்றார், உறவினர், நண்பர்களைக் கண்டு வாழ்த்துகளையும், இனிப்புகளையும் பரிமாறிக் கொள்ளும் நாளாக இது கொண்டாடப்படுகிறது. சுற்றுலாத் தலங்களுக்கும், பொழுதுபோக்குமிடங்களுக்கும் இந்த நாளில் போவது வழக்கம். கன்னியாகுமரி மாவட்டத்தில் கனி காணும் நாளாக இது கொண்டாடப்படுகிறது.

கரும்பு - ஜல்லிக்கட்டு – பொங்கல்

பொங்கல் பண்டிகையின் மூன்று முக்கிய அம்சங்கள், கரும்பு, ஜல்லிக்கட்டு, இனிப்புப் பொங்கல்தான். இவை இல்லாமல் பொங்கல் நிறைவடையாது. கரும்புக்கு பொங்கல் பண்டிகையின்போதுதான் தேவை அதிகமாக இருக்கும். அன்று முழுவதும் கரும்பு சாப்பிடுபவர்களும் இருக்கிறார்கள். அதேபோல பொங்கல் பண்டிகையின்போது கிராமங்களில் நடைபெறும் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகளும் விசேஷமானவை. அலங்காநல்லூர், பாலமேடு, காஞ்சரம்பேட்டை ஆகியவை ஜல்லிக்கட்டுக்கு பெயர் போனவை. இதில் அலங்காநல்லூர் உலகப் புகழ் பெற்ற ஜல்லிக்கட்டு களமாகும். தமிழர்களின் திருநாளாக, உழவர் திருநாளாக கொண்டாடப்படும் பொங்கல் பண்டிகை, தமிழ்ப் புத்தாண்டாகவும் இருப்பதால் தமிழர்கள் அனைவரும் இந்த இனிய நாளை, இரட்டிப்பு சந்தோஷத்துடனும், தித்திப்புடனும் கொண்டாடுகின்றனர்.

``மாசில்லா மார்கழி''

மழையும் பனியுமாய்
மாறிமாறி பொழிந்து,
அசுத்தமில்லா ஆக்ஸிஜனை
அதிகாலை வழங்கி,
அற்புதம் செய்திடும்
மக(ரு)த்துவம் மிகுந்த மாதமிது...!

மாதங்களில் நான் மார்கழியென
கண்ணனெனும் கடவுளவன் கூறியதால்,
அக்கண்ணனையே அடைந்திட எண்ணி
ஆண்டாளவள் பாவை நோன்பிருந்து
பாசுரம்பாடி கண்ணனை அடைந்தாளென,
இலக்கியங்கள் எடுத்துரைக்க,
கன்னிப் பெண்களெல்லாம்
பாவை நோன்பிருந்து
பாசுரம்பாடி ஆலயம் சென்று வந்தால்
ஆசைப்பட்ட கணவன் அமைந்திடுவானாம்...!

ஆம்...!
அதிகாலையெழுந்து
வாசலில் சாணம் தெளித்து
அரிசி மாவில் கோலமிட்டு,
அதன் நடுவில் பூசணிப்`பூ' வைத்தால்
விவாகம் செய்திட தயாராய்
வீட்டிலொரு பெண் இருப்பதாய்
பஜனை பாடி செல்லும் பெரியோரெல்லாம்
உற்ற துணையாக உறுதி செய்திடுவாராம்...!

அதிகாலை எழுதலும்,
ஆலயம் செல்லுதலும்
இறையருள் பெற்றிடயென
இலக்கியங்கள் சொன்னாலும்,
இயற்கையின் கொடையை
முழுதாய் பெற்று நோயற்ற வாழ்வு வாழ
வழி சொல்லும் அறிவியல் சூட்சுமம் இது...!

இம்மாசில்லா மார்கழியில்
உடலும் உள்ளமும் உறுதி பெற்றிட,
இயற்கையோடு இணைந்து வாழ
இனியாவது முயற்சிப்போம்...!

செந்தில் பலராமன், செயலர்,
தமிழ்நாடு மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் ஆய்வு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல் இயக்குநர் முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் 07.12.2020 அன்று விருதுநகர் மாவட்டத்தில் மகளிர் திட்டத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்தார். முன்னதாக தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் பிரதம மந்திரியின் PMSVANithi திட்டத்தின் கீழ் ரூ. 10,000/ கடனுதவி பெற்று, அதன் மூலம் தொழில்களை மீட்டெடுத்து தொடர்ந்து நடத்திவரும் சாலையோர வியாபாரிகளை நேரில் சந்தித்து அவர்களின் வாழ்வாதாரம் குறித்தும், மேலும் தொழில் முன்னேற்றத்திற்கு எவ்வாறு வங்கி இணைப்பு பெறுவது என்றும் ஆலோசனை வழங்கினார்கள்.

அதன் பின்பு விருதுநகர் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் தொடங்கப்பட்டு வெற்றிகரமாக இயங்கி வரும் நகர்ப்புற வாழ்வாதார மையத்தினை பார்வையிட்ட செயல் இயக்குநர் அவர்கள், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் Sep-I, Sep-G கடன் பெற்று குழுவாக தொழில் செய்து வரும் உறுப்பினர்களிடம் கலந்துரையாடினார். தொடர்ந்து ஆவுடையாபுரம் கிராமத்தில் ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் மூலம் தனிநபர் கடன் பெற்று வருவாய் ஈட்டி வரும் நபர்களை நேரில் சந்தித்து கலந்துரையாடினார். இந்த நிகழ்வின் போது, விருதுநகர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குர் திரு. கோ. குருநாதன், உதவித் திட்ட அலுவலர்கள், ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் அலுவலர்கள் உடனிருந்தனர்.

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புடன் கூடிய இலவச தொழில்திறன் மேம்பாட்டு பயிற்சி

தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் 01.12.2020 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் கே. செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் 2018-19 மற்றும் 2019-2020ஆம் ஆண்டிற்கான வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புடன் கூடிய இலவச தொழில் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் திருச்சி கிரண் இளைஞர் திறன் வளர்ப்பு பயிற்சி நிறுவனத்தின் கீழ் செயல்படும் தூத்துக்குடி பயிற்சி மையத்தின் மூலம் சுற்றுலா மற்றும் விடுதி மேலாண்மை, உணவு தயாரித்தல் மற்றும் பரிமாறுதல் பயிற்சி பெற்ற 56 பயனாளிகளுக்கு வேலைவாய்ப்பிற்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியின் போது தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி பி. ஜே. ரேவதி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

கடலூர் மாவட்டம்

துணிப்பை தயாரிக்கும் வேளாங்கண்ணி மகளிர் சுய உதவிக்குழு

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் நகராட்சிப் பகுதியில் உள்ள பழமலைநாதர் நகரில் கடந்த 2005ஆம் ஆண்டு முதல் வேளாங்கண்ணி மகளிர் சுய உதவிக்குழு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இக்குழுவில் உள்ள 13 உறுப்பினர்களுக்கும் மகளிர் திட்டம் மூலம் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

சுயமாகத் தொழில் தொடங்க வேண்டும் என்ற நோக்கத்துடன் செயல்பட்டு வந்த இக்குழுவின் உறுப்பினர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சுய வேலை வாய்ப்புத் திட்டம் (SEP-BL) மூலம் வங்கி கடன் உதவியாக ரூ.9,90,000/- வழங்கப்பட்டது. இந்தத் தொகையை மூலதனமாகக் கொண்டு, ஈரோடு மாவட்டத்திலிருந்து துணி வகைகளை மொத்தமாகக் கொள்முதல் செய்து, அவற்றை துணிப்பைகளாகத் தயாரித்து விருத்தாசலம் மற்றும் ஜெயங்கொண்டம் ஆகிய பகுதியில் உள்ள துணிக்கடைகளுக்கு விற்பனை செய்து வருகின்றனர். இதன் மூலம் வேளாங்கண்ணி மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்களுக்கு மாதந்தோறும் கணிசமான அளவில் வருவாய் கிடைத்து வருகிறது. தங்களுக்கு கடனுதவி வழங்கி, சுய தொழில் மேற்கொள்ள வைத்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு வேளாங்கண்ணி மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம்

துளசி மகளிர் சுய உதவிக்குழுவின் சுவையான கார தின்பண்டங்கள்

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டிணம் நகராட்சிக்குட்பட்ட அம்பேத்கார் நகரில் செயல்பட்டு வரும் துளசி மகளிர் சுய உதவிக் குழுவின் வெற்றிகரமான செயல்பாடுகள் குறித்து அக்குழுவினர் கூறும் போது, “எங்களது துளசி மகளிர் சுய உதவிக் குழுவில் 12 உறுப்பினர்கள் உள்ளனர். குழுவின் உறுப்பினர்களான நாங்கள் அனைவரும் இணைந்து கார தின்பண்டமான தட்டு வடையை தயார் செய்து குழுவில் நாங்களே நேரடியாக விற்பனை செய்து வருகிறோம்.

ஆரம்பத்தில் சிறிய அளவில் செய்து வந்த தொழிலை விரிவுபடுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் நாங்கள் இருந்தோம். ஆனால் அதற்கான முதலீடு எங்களிடம் இல்லை. இந்நிலையில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் எங்கள் தொழிலுக்கு தேவையான தொகை ரூ. 20,000/- த்தை ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி கடனாக வழங்கியது. இந்தத் தொகையைக் கொண்டு எங்கள் தொழிலை விரிவுபடுத்தியுள்ளோம். நாங்கள் தயாரிக்கும் தட்டுவடை பொதுமக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளதால் வியாபாரமும் நன்கு நடக்கிறது. அதன் மூலம் எங்களுக்குப் போதுமான வருவாயும் கிடைத்து வருகிறது. நாங்கள் பெற்ற வங்கிக் கடனையும் தவறாமல் திரும்பச் செலுத்தி வருகிறோம்.

எங்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு வழிகாட்டிய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கும், கடன் வழங்கிய ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கிக்கும் எங்களது துளசி மகளிர் சுய உதவிக் குழுவின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்” என்று துளசி மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம்

வளமான வாழ்வு தந்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகராட்சி வார்டு எண் 26ல் 3/341 சி2 பாரதி நகர் கிழக்கு 2வது தெருவில் வசித்து வரும் திருமதி. பாண்டி சுதா (க/பெ. பாலமுருகன்). தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் குறித்து கூறும்போது, நான் வசிக்கும் பகுதியில் உள்ள தனியார் நிறுவனத்தில் கடன் பெற்று சிறிய அளவில் முறுக்கு தயாரிக்கும் தொழில் நடத்தி, அதில் கிடைக்கும் குறைந்த வருவாயில் எனது குடும்பத்தை நடத்தி வந்தேன். எனது இரண்டு குழந்தைகளை படிக்க வைக்க முடியாமல் சிரமப்பட்ட நிலையில் இருந்த போது தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மூலம் தனிநபர்களுக்கு மானியத்துடன் கடன் வழங்கும் திட்டம் பற்றி இராமநாதபுரம் மாவட்ட மகளிர் திட்ட அலுவலகம் மூலம் அறிந்து, பரமக்குடி நகராட்சி அலுவலகத்தில் சமுதாய அமைப்பாளரை அணுகி, விபரங்கள் அறிந்து தனிநபர் கடன் பெறுவதற்காக விண்ணப்பம் பெற்று அதனை பூர்த்தி செய்து தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மூலம் பரமக்குடியில் உள்ள பாரத மாநில வங்கிக்கு அனுப்பி வைத்தேன்.

எனது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, வங்கி மேலாளரின் களப்பணி ஆய்வுக்குப் பின்னர் எனக்கு தனி நபர் கடன் தொகையாக ரூ.40,000/- வழங்கப்பட்டது. அந்தத் தொகையைப் பெற்று எனது தொழிலை மேலும் விரிவுபடுத்தி எனக்கு உதவியாக, இரண்டு பணியாளர்களை வேலைக்கு அமர்த்தி அவர்களுக்கு மாதம் தலா ரூ. 4000/- சம்பளம் வழங்கி வருகிறேன்.

இப்பொழுது S.M.முறுக்கு கம்பெனி என்ற பெயரில் எனது தொழிலை நல்ல முறையில் செய்து வருகிறேன். எனது கணவர் துணையுடன் திருமணங்கள் மற்றும் விசேஷங்களுக்கு முறுக்கு மற்றும் அதிரசம் செய்து எனது தொழிலை நல்ல முறையில் செய்து வருகிறேன். மேலும் நகரப் பகுதியில் உள்ள கடைகளுக்கு தினந்தோறும் இரு சக்கர வாகனத்தின் மூலம் நாங்கள் தயாரிக்கும் முறுக்கை விநியோகம் செய்து வருகிறோம். இதனால் எனக்கு மாதம் ரூ. 20,000/ முதல் ரூ. 30,000/ வரை வருவாய் கிடைக்கிறது. எனது குடும்பம் பொருளாதார முன்னேற்றம் அடைந்ததுடன் எனது குழந்தைகளை நல்ல முறையில் படிக்க வைத்துள்ளேன்.

சாதாரண நிலையில் தொழில் நடத்தி கொண்டிருந்த என்னை ஒரு கடைக்கு முதலாளியாக மாற்றி தனக்கு இந்த வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்" என்று திருமதி. பாண்டி சுதா மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

சென்னை மாவட்டம்

நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் தந்த முன்னேற்றம்

என் பெயர் ஜெயபாலன், நான் சென்னை மாவட்டம், அம்பத்தூர் மார்க்கெட் சாலையில் தள்ளுவண்டியில் பழங்களை வைத்து விற்பனை செய்து வருகிறேன். கொரோனா ஊரடங்கு அறிவிக்கப்பட்டதால் என்னால் தொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக எனக்கு வருவாய் கிடைக்காததால் நானும், எனது குடும்பமும் மிகவும் சிரமப்பட்டு வந்தோம். தற்போது ஊரடங்கு தளர்வுகள் அறிவிக்கப்பட்டதால் நான் மீண்டும் பழ வியாபாரம் செய்ய நினைத்தேன். ஆனால் அதற்கான முதலீட்டுத் தொகை இல்லாததால் என்ன செய்வது என்று தடுமாறிக் கொண்டிருந்த நிலையில், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் பாரதப் பிரதமரின் தெருவோர வியாபாரிகளுக்கு கடன் உதவி வழங்கும் PMSVANithi திட்டத்தின் கீழ் எனக்கு ரூ. 10,000/ கடனுதவி வழங்கப்பட்டது. அந்தத் தொகையைக் கொண்டு தேவையான பழ வகைகளை வாங்கி மீண்டும் வியாபாரம் செய்து வருவாய் பெற்று வருகிறேன். தக்க சமயத்தில் கடனுதவி வழங்கி எனது வாழ்க்கை நிலையை மேம்படுத்த உதவிய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேனி மாவட்டம்

தமிழ் திருநங்கைகள் சுய உதவிக் குழுவின் வெற்றிக் கதை

என் பெயர் கனகா (த/பெ. நாகராஜ்) நானும் எனது குழுவினரும் கடந்த 10 ஆண்டுகளாக விழாக் காலங்களில் சமையல் வேலை செய்து தினசரி ரூ.200/- முதல் ரூ.300/- வரை வருமானம் பெற்று வந்தோம். கரகாட்டம் மற்றும் சமையல் வேலையில் விழாக் காலங்களில் மட்டுமே வருமானம் கிடைத்தது. மற்ற நாட்களில் அன்றாட வாழ்க்கையை நடத்துவது மிகவும் சிரமமாக இருந்தது. ஒருமுறை தேனி நகராட்சியில் ஒரு கூட்டத்திற்கு சென்ற போது தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சமுதாய அமைப்பாளரை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவரது ஆலோசனையின்படி, என்னுடன் இருந்த 6 நபர்களை ஒருங்கிணைத்து `தமிழ் திருநங்கைகள் சுய உதவிக் குழு" என்ற பெயரில் ஒரு சிறப்புக் குழுவைத் தொடங்கினோம்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் யூனியன் வங்கியில் குழுவின் பெயரில் சேமிப்பு கணக்குத் துவங்கி முறையாக சேமிக்கத் துவங்கினோம். எங்களுக்கு சுழல் நிதி மானியமாக ரூ.10,000/- வழங்கப்பட்டது மிகவும் பேருதவியாக இருந்தது. தேனி நகராட்சி நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் உதவியுடன் தேனி கிளை யூனியன் வங்கியில் எங்களுக்கு ரூ.6,00,000/- கடனுதவி வழங்கப்பட்டது.

மேற்கண்ட தொகையின் மூலம் எங்களின் வருவாயை பெருக்கும் வகையில் எங்களின் தொழிலுக்குத் தேவையான சமையல் பாத்திரங்களை சொந்தமாகவே கொள்முதல் செய்து, ஆர்டரின் பெயரில் தேவையானப் பொருட்களை வாங்கி எங்கள் இருப்பிடத்திலேயே சமையல் தொழிலை மீண்டும் புது பொலிவுடன் தொடர்ந்து நடத்தி வருகிறோம். தற்போது எங்களுக்கு தினசரி வருமானமாக ரூ.500/- முதல் ரூ.600/- வரை கிடைக்கிறது. மேலும், தமிழ் திருநங்கைகள் சிறப்புக் குழுவை ஊக்குவிக்கும் வண்ணம் சமூக நலத்துறை மூலம் மானியமாக குழுவின் உறுப்பினர்களுக்கு நபர் ஒன்றிற்கு ரூ.50,000/- வீதம் வழங்கப்பட்டுள்ளது.

ஏழ்மையினாலும், மற்றவர்களின் புறக்கணிப்பினாலும் வாடிக்கிடந்த எங்களுக்கு தன்னம்பிக்கை அளித்து, குழுவாக ஒன்றிணைத்து, கடனுதவி வழங்கி, தற்போது எங்களுக்கு சிறந்த வாழ்வாதாரத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ள தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எங்களது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஈரோடு மாவட்டம்

வாழ்வில் முன்னேற்றம் தந்த நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

ஈரோடு மாவட்டம், கோபிச்செட்டிப் பாளையம் வட்டாரம், கொளப்பலூர் பேரூராட்சியில் வசித்து வரும் மயிலாத்தாள், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மூலம் தான் பெற்ற முன்னேற்றம் குறித்து கூறுகிறார். "நான் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர். எனது வருமானத்தில் தான் குடும்பம் நடத்தி வருகிறேன். ஏதாவது சுய தொழில் செய்து முன்னேற வேண்டும் என விரும்பி வீட்டிலேயே இட்லி சுட்டு வீட்டிற்கு முன் வைத்து விற்பனை செய்து வந்தேன். போதிய வருமானம் கிடைக்கவில்லை. பிறகு அந்தப் பகுதியில் தமிழ்நாடு மாநில நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் மகளிர் திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்ட ஸ்ரீ சாய் மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக சேர்ந்தேன். தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் குழுவில் உள்கடன் மற்றும் வங்கி கடன் பெற்று, அந்த தொகையை மூலதனமாக வைத்து தேவையான பாத்திரங்கள் மற்றும் உணவுப் பொருட்களை வாங்கி பூரி, இட்லி, சட்னி, குருமா என அனைத்தையும் என் வீட்டிலேயே சமைத்து, கூடையில் வைத்து தலையில் சுமந்து கொண்டு கால்நடையாகவே சுமார் 5 கி.மீ வரை நடந்து வியாபாரம் செய்கிறேன். தற்போது எனது குடும்பத்தை நடத்தும் அளவிற்கு வருமானம் ஈட்டி வருகிறேன்.

நான் சுய தொழில் செய்யவும், எனது வாழ்வாதாரத்தை முன்னேற்றவும் வழி ஏற்படுத்திக் கொடுத்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கும், மகளிர் திட்டத்திற்கும் எனது நன்றியை தெரிவித்து கொள்கிறேன்'' என்று மயிலாத்தாள் குறிப்பிட்டார்.

முற்றக் கச்சேரி

அன்புள்ள முற்றம் வாசகர்களே

சுய உதவிக் குழுவின் ஊக்குநர் மற்றும் உறுப்பினர்களிடையே நடைபெறும் உரையாடல்கள் மற்றும் கேள்வி பதில்கள் வாயிலாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்த விபரங்களை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் முற்றக் கச்சேரி வெளியிடப்படுகிறது. இது உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறோம். இனி முற்றக் கச்சேரிக்குள் போவோமா...

இடம் : சுய உதவிக் குழு அலுவலகம்

கதை மாந்தர்கள் :

ஊக்குநர் மதி சுய உதவிக் குழு அலுவலகத்தில் அமர்ந்திருக்கிறார். குழுவின் உறுப்பினர்களான வடிவு, கமலா, கோமதி ஆகிய மூவரும் அலுவலகத்தின் வெளியே இருக்கும் தண்ணீர் குழாயில் கைகளை நன்கு சோப்பு போட்டு கழுவி விட்டு அலுவலகத்திற்குள் வருகின்றனர். அனைவரும் முகக் கவசம் அணிந்துள்ளனர்.

கமலா, வடிவு, கோமதி : மதி அக்கா... மதி அக்கா...

மதி : வாங்க... வாங்க... வந்து உட்காருங்க...

மூவரும் இடைவெளி விட்டு அமர்கின்றனர்.

கமலா : என்னக்கா இந்த மாதம் எதைப்பத்தி சொல்லப் போறீங்க?

மதி : தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் செயல்படுத்தும் ஒரு திட்டத்தைப் பத்தி சொல்லப் போறேன்.

கோமதி : என்ன திட்டம் அக்கா?

மதி : நகர்ப்புறத்தில் வசிக்கும் ஏழை மக்களுக்கு திறன் பயிற்சிகளும், ஏற்கனவே பயிற்சி பெற்றவர்கள் தங்களின் திறன்களை மேலும் வளர்த்துக் கொள்ளவும் பயிற்சிகள் வழங்கும் திட்டம் தான் அது...

வடிவு : இந்தப் பயிற்சியின் பெயர் என்ன அக்கா?

மதி : வேலைவாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்புப் பயிற்சி மற்றும் பணியமர்வு பயிற்சி (ESTP) என்பது இத்திட்டத்தின் பெயராகும்.

வடிவு : இந்தப் பயிற்சித் திட்டத்தின் நோக்கம் என்ன அக்கா?

மதி : நகர்ப்புற ஏழைகளுக்கு திறனாக்க பயிற்சி மூலம் நிலையான வாழ்வாதாரத்தினை அமைத்துத் தருதலும், இப்பயிற்சி பெற்ற நபர்கள் சம்பளத்துடன் கூடிய வேலைவாய்ப்பை பெற்றிடவும், வறுமையை நீக்கி, நிலைத்தத் தன்மையின் அடிப்படையில் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றம் அடையச் செய்வதுமே இப்பயிற்சித் திட்டத்தின் நோக்கம் ஆகும்.



வடிவு : எந்த வகையான பயிற்சிகள் கொடுப்பாங்க அக்கா?

மதி : வேலைவாய்ப்பு சந்தைக்கேற்ப புதியதாக வேலை தேடுபவர்களுக்கான பயிற்சி, மறுதிறன் அல்லது கூடுதல் திறன் வளர்ப்பு பயிற்சி அல்லது ஏற்கனவே தொழில் செய்யும் நபருக்கு தொழில்சார் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்படுகிறது.

கோமதி : என்னென்ன பயிற்சிகள் கொடுப்பாங்க அக்கா?

மதி : விவசாயம், ஆடைகள் உற்பத்தி, அழகு கலை, இயற்கை வைத்தியம், நிதி சார்ந்த துறை, மூலதனப் பொருட்கள் தயாரிப்பு, கட்டுமானத்துறை, கல்வி / திறன் வளர்ப்பு, மின்னியல், இயந்திரவியல், இரண்டு மற்றும் மூன்று சக்கர வாகனங்கள் பழுது பார்த்தல், வாடிக்கையாளர் பயன்படுத்தும் விரைவுப் பொருட்கள், உணவு பதப்படுத்துதல், மர அலங்காரப் பொருட்கள் தயாரித்தல், நகைகள் தயாரிப்பு, கைவினைப் பொருட்கள், தகவல் மற்றும் தொழில் நுட்பம், தோல் பொருட்கள், மேலாண்மை, இரப்பர், சில்லறை விற்பனை, சுற்றுலா என ஏராளமான தொழில்களில் பயிற்சி வழங்கப்படும்.

கமலா : இந்தப் பயிற்சிகள் மட்டும்தானா? அல்லது இன்னும் இருக்கா?

மதி : தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பேச்சுத் திறன், கணினியில் அடிப்படை பயிற்சி மற்றும் வட்டார மொழி, பணியிடத்திற்கான திறமை போன்றவை குறித்த பயிற்சிகளும், சேமிப்பு, கடன்கள், மானியம், பணம் செலுத்தல், காப்பீடு, ஓய்வூதியம் போன்றவை குறித்த நிதி சார்ந்த அறிவுகளைப் பெறுவதற்கான பயிற்சிகளும், தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டம் குறித்து அறிந்து கொள்வதற்கான பயிற்சிகளும் வழங்கப்படுகிறது.

கோமதி : இந்தப் பயிற்சி எத்தனை மாசம் நடக்கும் அக்கா?

மதி : முதன் முறையாக பயிற்சி பெறும் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 4 முதல் 8 மணி நேரம் வரை என மொத்தம் குறைந்தது 200 மணி நேரத்திலிருந்து அதிகபட்சமாக 600 மணி நேரம் வரை பயிற்சி வழங்கப்படும். பயிற்சி நிலையத்தில் தங்கி பயிற்சி பெறுபவர்களுக்கு நாள் ஒன்றுக்கு அதிகபட்சம் 8 மணி நேரம் பயிற்சி வழங்கப்படும். ஏற்கனவே பயிற்சி பெற்றவர்களுக்கு அது தொடர்பான மேற்பயிற்சி பெறுவதற்கு 16 மணி நேர பயிற்சியும், முறையான சான்றுடன் பயிற்சி பெற்றவர் மேலும்

தொழில்திறன் பயிற்சி மற்றும் முன் அனுபவப் பயிற்சி பெற விரும்பினாலும் அவருக்கு பயிற்சி வழங்கப்படும்.

கமலா : பயிற்சி முடிந்தவுடன் வேலையும் வாங்கித் தருவாங்களா அக்கா?

மதி : திறன் பயிற்சி பெறுபவர்களில் 70 சதவீத நபர்கள் பணியில் அல்லது சுய வேலைவாய்ப்பின் மூலம் வருமானம் ஈட்டியிருக்க வேண்டும். மாற்றுத் திறனாளிகளுக்கு பயிற்சி முடித்த 3 மாத காலத்திற்குள் பணி வழங்கிட வேண்டும்.

கோமதி : பயிற்சி பெற்றவர்கள் சுய தொழில் செய்ய விரும்பினால் என்ன செய்யலாம் அக்கா?

மதி : பயிற்சிக்குப் பின்னர் சுய தொழில் மேற்கொள்ள விரும்புபவர்களுக்கு வங்கிக் கடன் பெற நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் வழிகாட்டும்.

வடிவு : இந்தப் பயிற்சிகளில் யாரெல்லாம் சேரலாம் அக்கா?

மதி : நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் திறன் வளர்ப்புப் பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் நகர்ப்புறங்களில் வசிக்கும் வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள ஏழை குடும்பங்களில் இருந்து மட்டுமே தேர்வு செய்யப்பட வேண்டும்.

கோமதி : அப்படி தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஏதாவது விதி இருக்கிறதா அக்கா?

மதி : பயிற்சியாளர் கடந்த மூன்று ஆண்டுகளில் பொன்விழா ஆண்டு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (SJSRY), தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM) ஆகிய திட்டங்களின் கீழ் எந்தப் பயிற்சியும் பெற்றிருக்கக் கூடாது. பயிற்சி வகைக்கு ஏற்ப குறைந்தபட்ச கல்வித் தகுதி பெற்றிருக்க வேண்டும். குறிப்பிட்ட விகிதத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் பிரிவினர் என பயிற்சியாளர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். மொத்தப் பயிற்சியாளர்களில் பெண்கள் 30 விழுக்காடும், சிறுபான்மையினத்தவர் 15 விழுக்காடும், குறைந்தது 3 விழுக்காடு மாற்றுத் திறனாளிகளும் இருக்க வேண்டும்.

கமலா : இந்தப் பயிற்சி குறித்து நமக்கு எப்படி தெரியப்படுத்துவாங்க அக்கா?

மதி : நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் மாவட்ட திட்ட அலகுகள் இணைந்து செய்தித் தாள்கள், வானொலி, தொலைக்காட்சி, சுவரொட்டிகள், வரைபடங்கள் மற்றம் மகளிர் சுய உதவிக் குழு கூட்டங்கள் மற்றும் நகர்ப்புற வாழ்வாதார மையங்கள் மூலமாக பயிற்சி குறித்த விபரங்களை தெரியப்படுத்தப்படும். உள்ளாட்சி அமைப்புகள், நகர்ப்புற வாழ்வாதார மையங்கள் போன்றவற்றிலும் பயிற்சி குறித்த முழு விபரங்களும் விளம்பரப்படுத்தப்படும்.

வடிவு : இந்த பயிற்சியில் சேர எப்படி விண்ணப்பிக்க வேண்டும் அக்கா?

மதி : இந்தப் பயிற்சியில் சேர விரும்புவோர் தன்னைப் பற்றி முழு விபரங்களை (பெயர், வயது, கல்வித் தகுதி, ஆதார் எண், சேர விரும்பும் பயிற்சி ஆகியன) ஒரு வெள்ளைத் தாளில் பூர்த்தி செய்து, உள்ளாட்சி அலுவலகம், வார்டு அலுவலகம், சுய உதவிக் குழுக்கள், சமுதாய அமைப்பாளர்கள், நகர்ப்புற வாழ்வாதார மையங்கள், நகர்ப்புற பகுதி அளவிலான கூட்டமைப்புகள், தேர்வு செய்யப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் தொடர்பான அனைத்து அமைப்புகளிலும் ஏதாவது ஒன்றில் விண்ணப்பத்தை அனுப்பலாம்.

கமலா : நாம் பயிற்சிக்கு தேர்வு செய்யப்பட்ட விபரத்தை நமக்கு எப்படி தெரிவிப்பாங்க அக்கா?

மதி : பயிற்சிக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு போதிய கால அவகாசத்தில் மின்னஞ்சல், கடிதங்கள், குறுஞ்செய்திகள், மகளிர் சுய உதவிக் குழுக்கள், நகர்ப்புற பகுதி அளவிலான கூட்டமைப்புகள் போன்றவைகள் மூலம் பயிற்சி குறித்த முழு விபரங்களும் தெரியப்படுத்தப்படும்.

வடிவு : பயிற்சிக்கு வருபவர்களுக்கு ஏதாவது சலுகைகள் தருவாங்களா அக்கா?

மதி : கண்டிப்பா தருவாங்க வடிவு...

கமலா : என்ன மாதிரியான சலுகைகள் தருவாங்க அக்கா?

மதி : சிறப்புப் பகுதியிலிருந்து பயிற்சி பெற வரும் மாற்றுத் திறனாளிகள் மற்றும் பெண்களுக்கு பயிற்சி நிலையத்திற்கு சென்று வரும் செலவிற்காக ஒருநபருக்கு அதிகபட்சமாக ரூ. 5,000/- வரை மூன்று மாதம் வரை பயணத் தொகை வழங்கப்படும். மாற்றுத்திறனாளி பயிற்சியாளருக்கு பயணப்படியாக தூரத்திற்கு ஏற்ப ரூ.1,500/- வரை ஒரு மாதத்திற்கு வழங்கப்படும்.

வடிவு : இதுமட்டும் தானா அக்கா?

மதி : இன்னும் இருக்கு கேளுங்க... பயிற்சிக்குப் பின்னர் வேலை கிடைக்கும் வரை ஆதரவுத் தொகை, சீருடைக்கான தொகை, மாற்றுத் திறனாளிகளுக்கு தனிப்பட்ட முறையில் தேவைப்படும் சக்கர நாற்காலி, செயற்கை கால்கள், காது கேட்கும் கருவி, படித்து பேசி அறியக்கூடிய மென்பொருட்கள் வாங்கிடத் தேவையான உதவிகள் பிற துறை இணைவு (Convergence) மூலம் வழங்கப்படும்.

கமலா : நம்ம தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் நகர்ப்புற ஏழை மக்களுக்கு வழங்கப்படும் வேலைவாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்பு மற்றும் பணியமர்வு பயிற்சி குறித்து எங்களுக்கு நிறைய விஷயங்கள சொல்லி புரிய வைச்சிருக்கீங்க. அதுக்கு ரொம்ப சந்தோஷம் அக்கா. நாங்க வரட்டுமா அக்கா?

மதி : சரி போயிட்டு வாங்க...

கமலா, கோமதி, வடிவு ஆகிய மூவரும் மதியிடம் விடைபெற்று, தங்களின் வீடுகளுக்குச் செல்கின்றனர்.

(முற்றக் கச்சேரி தொடரும்)

மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம்

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் முக்கிய பணிகளில் ஒன்று "மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம்" தயாரித்தல் ஆகும். ஊரக தொழில் முனைதலை ஊக்கப்படுத்தி மேம்படுத்தும் நோக்கில் திட்டத்தின் பல்வேறு மாவட்டங்களில் தொழில் விரிவாக்கத்திற்கு ஏற்ற முயற்சிகளுடன் தொழில் முனைதலை ஊக்கப்படுத்தும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் செயல்படுத்துதல் குறித்து தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் தலைமைச் செயல் அலுவலர் (பொ) முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட திட்ட அலுவலர்களுடன் சிறப்பு ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினார். காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்ற இக்கூட்டத்தில் மாநில செயலாக்க அலகின் அலுவலர்கள் மற்றும் அனைத்து மாவட்ட செயல் அலுவலர்கள் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டப் பயிற்சியை மாவட்டங்களில் விரைவாக துவங்குவது மற்றும் பயிற்சியின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயல்படுவது, கைபேசி வாயிலாக விபரங்களைப் பதிவு செய்வது மற்றும் மாவட்ட அளவில் துவங்கப்படும் தேதிகள் குறித்தும் ஆலோசனைகள் வழங்கினார். இந்தக் கூட்டத்தில் ஊரக தொழில் மேம்பாட்டிற்காக வளர்ச்சியை உள்ளடக்கிய முதலீட்டுத் திட்டங்களை உருவாக்கவும் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்திற்கு இது மிகவும் இன்றியமையாதது என்பதையும் வலியுறுத்தினார்.

மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் குறித்து சமுதாய அமைப்புகளுக்கான மாவட்டம் மற்றும் வட்டார அளவிலான பயிற்சிகள் தொடங்கப்பட்டு வருகிறது. இந்தப் பயிற்சிகளில் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சி திட்ட செயலியின் செயல்முறைகள், பயன்பாடுகள் மற்றும் எவ்வாறு இந்த செயலியின் மூலம் கிராம முதலீட்டுத் திட்டத்தை தயார் செய்வது என்பது குறித்து மாவட்ட செயல் அலுவலர்கள், மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சி திட்ட அணியினர்களுக்கு பயிற்சி அளிக்கிறார்கள். இந்தப் பயிற்சிகள் முடிவடைந்ததும் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சி திட்டம் முழுவீச்சில் துவங்க உள்ளது.

சொந்த ஊரில் ஒரு நாற்றுப்பண்ணை

என் பெயர் வினோத் (த/பெ. முருகேசன்). கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி ஒன்றியம், சிக்கபூவத்தி ஊராட்சியில் வசிக்கும் நான் டிப்ளமோ வரை படித்துள்ளேன். குடும்ப சூழ்நிலை காரணமாக கடந்த இரண்டு வருடங்களாக பெங்களூருவில் ஒரு பேக்கரி கடையில் வேலை செய்து வந்தேன். நல்ல முறையில் பணியாற்றி கொண்டிருந்த நிலையில் திடீர் என கொரோனா (கோவிட்19) தொற்று பாதிப்பின் காரணமாக பொது முடக்கம் அமலானதால் அனைத்து தொழிலாளர்களும் சொந்த ஊருக்கு திருப்பி அனுப்பப்பட்டனர். அவ்வாறு வந்த நானும் எனது சொந்த ஊரில் வேலையில்லாமல், வருமானத்திற்கு வழியின்றி இருந்த போது எங்கள் ஊராட்சியில் உள்ள கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தில் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் மூலம் புலம் பெயர்ந்து மீண்டும் ஊர் திரும்பிய திறன் பெற்ற இளைஞர்களுக்காக கொரோனா (கோவிட்19) சிறப்பு நிதி உதவி வழங்குவதாக தெரிய வந்தது.

எனவே கிருஷ்ணகிரி வட்டாரத்தில் உள்ள தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் அலுவலகத்தை அணுகி எனக்கு நன்கு தெரிந்த நாற்றுப்பண்ணை தொழிலை துவங்குவதற்கான ஆலோசனைகளைப் பெற்று, அவர்களின் வழிகாட்டுதலின் பெயரில் விண்ணப்பம் செய்தேன். தேவையான ஆவணங்களுடன் விண்ணப்பம் செய்த பின் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் அலுவலகப் பணியாளர்கள் கள ஆய்வு செய்து பின்னர் கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் மூலம் ரூ. 1,00,000/ கடனாக வழங்கினர். அதனை மூலதனமாகக் கொண்டும், எனது சேமிப்பினை கொண்டும் நாற்றுப் பண்ணையினை தொடங்கினேன்.

சொந்த ஊரில் வேலையில்லாமல், வருமானத்திற்கு வழியில்லாமல் தவித்த எனக்கு சரியான வழிகாட்டுதல் மற்றும் நிதி உதவி கிடைத்ததால் தற்போது சிறந்த தொழில் முனைவோராக என்னால் செயல்பட முடிகிறது. நாற்றுப் பண்ணையின் மூலம் கணிசமான வருமானம் கிடைக்கவும், வாழ்வாதரம் மேம்படவும் வழி ஏற்பட்டுள்ளது. இது என் போன்ற இளைஞர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும் என நம்பிக்கை கொள்கிறேன். இந்த வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டத்திற்கும், தமிழக அரசுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலாளியை முதலாளி ஆக்கிய தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

என் பெயர் நாகராஜ், நான் நாமக்கல் மாவட்டம், பள்ளிப்பாளையம் வட்டாரம், சௌதாபுரம் ஊராட்சி, கொல்லப்பட்டி காலனியில் தற்போது வசித்து வருகிறேன். படைத்தது தான் படைத்தான் ஆண்டவன், எல்லோரையும் போல் என்னையும் முழுமையாக விட்டிருக்க கூடாதா? மாற்றுத்திறனாளி ஆக்கிவிட்டான். 1 1/2 வயதில் எனக்கு என்ன விவரம் தெரியும்?. ஏதோ போலியோ நோய் பாதிப்பாம். என் தந்தை மூட்டை தூக்கும் தொழிலாளி, தாய் கூலி வேலைக்கு செல்கிறார். இவர்களின் சொற்ப வருமானத்தைக் கொண்டுதான் எங்கள் குடும்பம் ஓடிக் கொண்டிருந்தது. மாற்றுத்திறனாளியாக இருந்தால் என்ன? அதனை மனதில் குறையாக நினைத்தால்தான் குறை; குறையாக நினைக்கவில்லை என்றால் நிறை என்ற துணிவோடு ஈரோட்டில் உள்ள தச்சு வேலை செய்பவரிடம் உதவியாளராக சேர்ந்து, இப்போது 17 வருடம் ஆகிவிட்டது.

டைனிங் டேபிள், மரக்கட்டில், ஷோகேஸ், சோபா, டீபாய் ஆகிய அனைத்து மர வேலைகளும் செய்வேன். மாற்றுத் திறனாளி என்ற நிலை ஒருபக்கம், வறுமை ஒரு பக்கம், இதெல்லாம் போதாது என்று இப்போது இன்னொரு விசயம் எங்கள் வாழ்வில் வேதனையை கொடுத்தது. அதுதான் கோவிட்19 வைரஸ் மற்றும் முழு ஊரடங்கு உத்தரவு. இதனால் வேலையிழந்து சொந்த ஊருக்கு திரும்பி வந்தேன். வருமானமில்லா வாழ்வு என்னை கடுமையாக பாதித்தது. இருப்பினும் ஒரு மாற்றுத் திறனாளிக்கு நல்ல அரசாங்கமும், நல்ல குடும்பமும் அமைந்து விட்டால் தான் ஒரு மாற்றுத் திறனாளி என்ற எண்ணம் சிறிதும் இன்றி மகிழ்ச்சியுடன் வாழ முடியும் என்று நம்புகிறவன் நான். அது போலவே என் வாழ்வில் நடந்தது.

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் மூலம் மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர்களுக்கான மூலதன மானிய நிதி வழங்கும் செய்தியறிந்தேன். கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் மூலம் என்னை தேர்வு செய்து கோவிட்19 சிறப்புக் கடன் ரூ. 10,000/- வழங்கினார்கள். ஏற்கனவே சொந்தமாக தொழில் செய்ய காத்திருந்த எனக்கு இது ஒரு அதிர்ஷ்டம் என்றே சொல்ல வேண்டும். இப்போது ரூ. 10,000/-த்தில் ரீப்பர், கார்ட்போர்ட், டூல்ஸ் போன்றவைகளை வாங்கி சொந்தமாக தொழில் தொடங்கி விட்டேன். நிறைய ஆர்டர்கள் கைவசம் உள்ளன. எங்கள் ஊர் வரை வந்து என்னைப் போன்ற பலருக்கும் உதவி செய்யும் ஊரக புத்தாக்கத் திட்டத்திற்கும், என்னை போன்ற மாற்றுத் திறனாளிகளின் நல்வாழ்விற்காக செயல்படும் கிராம வறுமை ஒழிப்பு சங்கத்திற்கும் எனது இதய பூர்வமான நன்றியை காணிக்கையாக்குகிறேன்.

கடலில் கூண்டு மீன்கள் வளர்த்தலுக்கு உதவி செய்த கொரோனா சிறப்பு நிதி உதவித் திட்டம்

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம், மன்னார் வளைகுடா கடல் பகுதியை சார்ந்த மரைக்காயர் பட்டிணம் ஊராட்சியில் வசித்து வரும் நாகார்ஜுன் ஆகிய எனக்கு வயது 24 ஆகிறது. பொறியியல் பட்டதாரியான நான் கல்லூரி பட்டப் படிப்பை முடித்தவுடன் எங்கள் ஊரில் அமைந்துள்ள CMFRI மத்திய அரசு நிறுவனத்தில் கடலில் கூண்டு மீன்கள் வளர்த்தல் பயிற்சியில் ஓராண்டு கலந்து கொண்டு பயிற்சி முடித்தேன். பயிற்சி முடிந்தவுடன் சொந்தமாக கூண்டு வலை வாங்கினேன். மேலும் கூண்டில் வளர்த்தலுக்கான மீன் குஞ்சுகள் CMFRI அலுவலக உதவியுடன் வாங்கினேன். இதில் நாள்தோறும் மீன்களுக்கு உணவு வழங்க நாள் ஒன்றுக்கு ரூ.2000/- வரை செலவு ஆகியது. மேலும் கூண்டு வலை வாங்கியதில் சிறிது தொகை கடனாக வாங்கியிருந்தேன். கொரோனா நோய் காரணமாக கூண்டு மீன்கள் வளர்த்தலுக்கு தடை ஏற்பட்டது. மேலும் மீன் உணவு வாங்குவதற்கும் நிதி பற்றாக்குறை ஏற்பட்டது.

இந்த சமயத்தில் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் கீழ் கோவிட்19 சிறப்பு நிதி உதவி திட்டத்தின் மூலம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக இருக்கும் குடும்பத்திற்கும் கடன் கிடைக்கும் என்பதை கேள்விப்பட்டேன். எனது தாயார் எங்கள் பகுதியில் செயல்படும் ஸ்ரீ அரசநாயகி சுய உதவிக் குழுவில் உறுப்பினராக இருந்ததால் சுய உதவிக் குழுவின் வழியாக விண்ணப்பம் செய்தேன். எனது கடன் விண்ணப்பத்தை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஏற்றுக் கொண்டு எனக்கு ரூ. 45,000/- ஸ்ரீஅரசநாயகி மகளிர் சுய உதவிக் குழு வழியாக வழங்கினார்கள். நிதியில்லாமல் சிரமப்பட்ட போது மீன் குஞ்சுகள் வாங்குவதற்கும், மீன்களுக்கு உணவுகள் வழங்குவதற்கும், தக்க சமயத்தில் என்னுடைய தொழிலை மேம்படுத்துவதற்கும் இந்த கடன் நிதியை வழங்கி மீன்களுக்கு உணவு கொடுத்து உதவிய தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புலம் பெயர்ந்து மீண்டும் திரும்பிய இளைஞரின் வெற்றிக் கதை

என் பெயர் மணிகண்டன் (த/பெ. குருசாமி). திருச்சி மாவட்டம், துறையூர் வட்டாரம், பெருமாள்பாளையம் ஊராட்சியில் வசித்து வருகின்றேன். நான் B.E., மெக்கானிக் படித்து விட்டு என்னுடைய வாழ்வாதாரத்திற்காக சென்னை சென்று 12 வருடங்களாக தாம்பரத்தில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து, தொடக்கத்தில் ரூ.10,000/- மாதச் சம்பளமும், பிறகு படிப்படியாக உயர்ந்து ரூ.26,500/- சம்பளமும் பெற்றேன். கொரோனா நோய்த்தொற்று காரணமாக நான் என்னுடைய வேலைவாய்ப்பை இழந்து, எனது சொந்த கிராமமான பெருமாள்பாளையத்திற்கு குடும்பத்துடன் திரும்பினேன்.

எனது குடும்பம் விவசாயக் குடும்பம், கொரோனா நோய் தொற்று காரணமாக விவசாயத்திலும் விலை வீழ்ச்சி ஏற்பட்டு வாழ்க்கையை நடத்துவதற்கும், வருமானத்திற்கும் என்ன செய்வது என்று தெரியாத நிலையில் மிகுந்த மனக்குழப்பத்திலும், மன வேதனையிலும் இருந்தேன்.

நான் 4 வருடத்திற்கு முன்பு சென்னை அண்ணாநகரில் உள்ள அண்ணா வேளாண்மை பல்கலைக் கழகத்தில் காளான் வளர்ப்பு பயிற்சி எடுத்திருந்தேன். ஏன் நம்முடைய கிராமத்தில் காளான் வளர்ப்பு செய்யக் கூடாது? என்ற எண்ணம் தோன்றியது. ஆனால் தொழில் தொடங்குவதற்கான நிதி தேவைப்பட்டது. அப்போது தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம், திருச்சி மாவட்டம், துறையூர் வட்டார அலுவலகத்தில் புலம் பெயர்ந்து மீண்டும் திரும்பிய திறன் பெற்ற இளைஞர்களுக்கான கோவிட்-19 சிறப்பு நிதிஉதவித் தொகுப்பு மூலம் தொழில் தொடங்குவதற்கு நிதி உதவி அளிப்பதாக, எங்களுடைய ஊராட்சியின் கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் வாயிலாக அறிந்து, அதற்கான விண்ணப்பப் படிவத்தை பெற்று பூர்த்தி செய்து வட்டார மேலாண்மை அலுவலகத்திற்கு சென்று சமர்ப்பித்தேன்.

என்னுடைய விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு, நேரில் ஆய்வு செய்யப்பட்டு, எனக்கு தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் கீழ் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மூலம், புலம் பெயர்ந்து மீண்டும் திரும்பிய திறன் பெற்ற இளைஞர்களுக்கான கோவிட்19 சிறப்பு நிதி உதவித் தொகுப்பு மூலம் ரூபாய் 1,00,000/- நிதி உதவி கிடைத்தது.

அந்தத் தொகையில் காளான் வளர்ப்பு தொழில் செய்வதற்குத் தேவையான மூலப் பொருட்களை வாங்கி எனது வீட்டின் முன் பகுதியில் காலியாக இருந்த இடத்தில் சிறு கொட்டகை அமைத்து காளான் வளர்ப்பு தொழில் தொடங்கி தற்போது வெற்றிகரமாக நடத்தி வருகின்றேன். நாள் ஒன்றுக்கு 4 கிலோ முதல் 7 கிலோ வரை காளான் அறுவடை செய்து கிலோ ரூ.250/- வீதம் விற்பனை செய்கின்றேன். துறையூர் மற்றும் பக்கத்து கிராமத்திற்கும் இருசக்கர வாகனத்தில் சென்று நேரடியாகவும் காளான்களை விற்பனை செய்கின்றேன். தற்போது நகர்ப்புற உணவகங்களில் இருந்து காளான் வாங்குவதற்கு தொடர்பு கொள்கிறார்கள். தற்போது காளான் வளர்ப்பு தொழிலை விரிவுபடுத்த உள்ளேன்.

திருச்சி மாவட்ட தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் திட்ட செயல் அலுவலர், செயல் அலுவலர்கள் மற்றும் வட்டார அலுவலர்கள் அவ்வப்போது நேரில் வந்து என்னுடைய காளான் வளர்ப்பு பண்ணையை பார்வையிட்டு தொழிலை விரிவுபடுத்தவும், விற்பனையை பெருக்கவும் தேவையான ஆலோசனைகளை வழங்கி எனக்கு ஊக்கமும், உற்சாகமும் அளிக்கின்றனர்.

காளான் வளர்ப்பு தொழில் மூலம் என் சொந்த கிராமத்திலேயே எனக்கு மாதம்தோறும் ரூ.20,000/- முதல் ரூ.25,000/- வரை வருமானம் கிடைக்கின்றது. என்னுடைய குடும்பத்தினை நல்முறையில் நடத்திட, எனக்கு நிதி உதவி அளித்து, என்னுடைய வாழ்வில் ஒளி ஏற்றி வைத்த தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் மற்றும் தமிழக அரசுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஊரக புத்தாக்கத் திட்டம் தந்த பொருளாதார வளர்ச்சி

கடலூர் மாவட்டம், குமராட்சி ஒன்றியம், உசுப்பூர் ஊராட்சிக்கு உட்பட்ட அம்மாபேட்டை குடியிருப்பில் வசிக்கும் என் பெயர் துர்கா (க/பெ. கேசவன்). கணவனை இழந்த நான் எனது இரண்டு மகள்களுடன் மிகவும் சிரமத்துடன் வாழ்ந்து வந்தோம். குடும்ப வருமானத்திற்காக எனது வீட்டிலேயே இட்லி கடை நடத்தி வந்தேன். கடந்த மூன்று ஆண்டுக்கு முன்னர் நாககன்னி என்ற மகளிர் சுய உதவி குழுவை உருவாக்கினேன். சிறிது காலத்திற்குப் பின் வங்கியின் மூலம் கடன் பெற்ற தொகை மற்றும் எனது சொந்த மூலதனத்துடன் நாககன்னி மகளிர் உணவகம் என்ற பெயரில் அம்மாபேட்டை மெயின் ரோட்டில் உணவகம் துவக்கினேன். தற்போது இந்த உணவகத்தில் நாககன்னி மகளிர் சுய உதவி குழுவை சேர்ந்த ஆறு நபர்களையும் இணைத்துக் கொண்டு உணவகம் நடத்தி வருகின்றேன்.

ஆரம்பத்தில் மதியம் ஒருவேளை உணவு வகைகளை விற்பனை செய்து வந்த நான் பின்னர் மூன்று வேளைகளும் உணவு விற்பனை செய்யத் தொடங்கினேன். இந்நிலையில் கொரோனா ஊரடங்கால் கையில் இருந்த தொகை மற்றும் பொருட்கள் அனைத்தும் தீர்ந்து விட வருமானத்தை இழந்து வாழ்வாதாரமே கேள்விக் குறியாக இருந்த நேரத்தில் இருள் போக்கும் ஒளியாய் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் கோவிட்-19 சிறப்பு உதவித் திட்டம் மூலம் கொரோனாவால் பாதிக்கப்பட்ட தொழில் முனைவோருக்கு கடன் வழங்குவதாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டது. வாடிய பயிருக்கு நீர் ஊற்றுவது போல ரூ.40,000/- கடன் தொகை எனக்கு வழங்கப்பட்டது. மீண்டும் எனது உணவகத்தை நடத்துவதற்கு ஏதுவாக இந்த நிதி அமைந்தது. இந்த நிதியை வழங்கிய தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டத்திற்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரீச்சம் பழத்தின் எண்ணிலடங்கா பலன்கள்!

பழங்களில் சிலவற்றை நேரடியாக அப்படியே சாப்பிடலாம், சிலவற்றை காயவைத்து பதப்படுத்தி சாப்பிடலாம். பழங்கள் அனைத்தும் மருத்துவக் குணம் கொண்டவை. அத்தகைய பழங்களில் பேரீச்சம்பழம் முதலிடம் வகிக்கிறது. இது மிகவும் சத்துள்ள பழமாகும். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பி சாப்பிடும் பழம். இந்த பழத்தில் இரும்புச் சத்து, கால்சியம் சத்து, வைட்டமின் ஏ, பி, பி2, பி5 மற்றும் வைட்டமின் இ சத்துக்கள் நிறைந்துள்ளன.

வைட்டமின் 'ஏ' குறைவினால் கண் பார்வை மங்கலாகும். இதைக் குணப்படுத்த பேரீச்சம் பழமே சிறந்த மருந்தாகும். மாலைக் கண் நோயால் பாதிக்கப்பட்டவர்கள், பேரீச்சம் பழத்தை தேனுடன் கலந்து ஊற வைத்து சாப்பிட்டு வந்தால் உடலுக்குத் தேவையான எல்லா சத்துக்களும் கிடைக்கும். இதனால் கண் பார்வைக் கோளாறுகள் நீங்கும்.

பேரீச்சம் பழத்தின் கொட்டைகளை நீக்கி பாலில் போட்டு காய்ச்சி ஆறியபின் பழத்தை சாப்பிட்டு பாலையும் பருகி வந்தால் சளி, இருமல் குணமாகும். நீரழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எலும்புகள் பலம் இழந்து காணப்படும். இவர்களுக்கு கால்சியம் இரும்பு சத்து தேவை. இவர்கள் தினமும் ஒன்று அல்லது இரண்டு பழம் வீதம் சாப்பிட்டு வந்தால் உடலுக்குத் தேவையான சத்துக்கள் கிடைக்கும்.

பேரீச்சம் பழம் இரத்தத்தைச் சுத்தப்படுத்தி விருத்தி செய்யும். எலும்புகளை பலப்படுத்தும். இளைப்பு நோயைக் குணப்படுத்தும். முதியோருக்கு ஏற்ற மருந்தாக பேரீச்சம் பழம் உள்ளது. அவர்களுக்கு ஏற்படும் உடல் ரீதியான இன்னல்களைக் குறைக்கும். புண்கள் ஆறும். மூட்டு வலி நீங்கும். பேரீச்சம் பழத்தை பசும்பாலில் வேக வைத்து அருந்தி வந்தால் இதய நோய்கள் அண்டாது.

சத்தும், சுவையும் நிறைந்த வெஜிடபிள் ஊத்தாப்பம்

சுவையாகவும், அதே சமயம் சத்து நிறைந்ததாகவும் உள்ள வெஜிடபிள் ஊத்தாப்பம் செய்முறைப் பற்றி தெரிந்து கொள்வோம் வாருங்கள்.

தேவையான பொருட்கள்:

தோசை மாவு தேவையான அளவு, பொடியாக நறுக்கிய வெங்காயம், குடைமிளகாய் மற்றும் கேரட் தலா இரண்டு டேபிள் ஸ்பூன், பொடியாக நறுக்கிய தக்காளி மற்றும் கொத்தமல்லி தலா ஒரு டேபிள் ஸ்பூன், பொடியாக நறுக்கிய பச்சை மிளகாய் 1

செய்முறை:

ஒரு கிண்ணத்தில் வெங்காயம், குடைமிளகாய், தக்காளி, கேரட், பச்சை மிளகாய், கொத்தமல்லி ஆகியவற்றை எடுத்து நன்கு கலந்து கொள்ள வேண்டும். பின் ஓரளவு கெட்டியான தோசை மாவை எடுத்துக் கொள்ளவும். பின்பு தோசைக்கல்லை அடுப்பில் வைத்து சூடானதும், அதில் எண்ணெய் தடவி ஒரு கரண்டி தோசை மாவை ஊற்றி, பெரிய வட்டமாக சுற்றாமல், ஓரளவு மொத்தமாக சுற்றிக் கொள்ளவும். பிறகு அதன் மேல் சிறிது வெஜிடபிளைத் தூவி, எண்ணெய் ஊற்றி, ஒரு மூடி கொண்டு 2 நிமிடம் மூடி வைத்து குறைவான தீயில் வேக வைக்கவும். பின் தோசையை திருப்பிப் போட்டு லேசாக தோசை கரண்டியால் அழுத்தி விட்டு, இரண்டு நிமிடம் வேக வைத்து எடுத்தால், வெஜிடபிள் ஊத்தாப்பம் தயார்.

இந்த வெஜிடபிள் ஊத்தாப்பத்தில் பலவகையான காய்கறிகள் சேர்ப்பதால், அதில் வைட்டமின்கள், கனிமச் சத்துக்கள் போன்றவை அதிகம் நிறைந்திருக்கும். இதை காலை வேளையில் சாப்பிடும் போது, அந்நாளுக்குத் தேவையான ஆற்றல் உடலுக்கு கிடைக்கும்.

குறிப்பு:

வெஜிடபிள் ஊத்தாப்பத்திற்கு தேவையான காய்கறிகள் முற்றிலும் உங்களது விருப்பத்தைப் பொறுத்தது. ஆனால் வேகமாக வெந்துவிடும் காய்கறிகளை சேர்த்துக் கொள்வது நல்லது

அஜீரணத்தை போக்கும் சமையலறை பொருட்கள்

வேலை முடிந்து வீட்டிற்கு வரும்போதே இன்றைக்கு சாப்பாடு கார குழம்போ அல்லது சாம்பாரோ என நினைத்துக் கொண்டே வீட்டிற்கு வருபவர்கள் வீட்டில் சிக்கனோ, மட்டனோ இருந்தால் ஒரு பிடி பிடித்து விட்டு அஜீரணக் கோளாறால் அவதிப்படுவது வழக்கம். இவ்வாறு திடீர் அஜீரணக்கோளாறால் அவதிப்படுபவர்களுக்காகவே வீட்டில் இருக்கின்றது மருந்து. வெளியில் சென்று வாங்கவும் வேண்டாம், அடுப்பங்கரைப் பொருட்களை வைத்து எப்படி அஜீரணத்தை போக்கலாம் என்பதை பற்றி பார்ப்போம்.

எலுமிச்சை மற்றும் இஞ்சி

எலுமிச்சை மற்றும் இஞ்சி அனைவரின் வீடுகளிலும் கிடைக்கும் ஒரு சமையலறை பொருளாகும். அஜீரணக் கோளாறை போக்க இஞ்சி பெரிதும் பயன்படுகிறது. அதிகமாக சாப்பிட்டு அஜீரணக் கோளாறால் அவதிப்படுபவர்கள் சாப்பிட்ட பின்னர் தேவையான அளவு தண்ணீரை ஒரு தம்ளரில் எடுத்துக் கொண்டு அதனுடன் 2 டீஸ்பூன் எலுமிச்சை சாறு, 2 டீஸ்பூன் இஞ்சி சாறு மற்றும் தேன் சேர்த்து கலந்து அருந்தினால் அஜீரணக் கோளாறுக்கு குட்பை சொல்லி விடலாம்.

மோர்

நீர்த்த மோரில் கால் டீஸ்பூன் மிளகுத் தூளும் சீரகத் தூளும் கலக்கிக் குடித்தால், அஜீரணக் கோளாறு உடனே சரியாகும்.

பூண்டு மருத்துவம்

வீட்டு மருத்துவத்தில் பூண்டுக்கு தனி இடமே உண்டு. அனைத்து மருத்துவ குணங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள ஒரு சிறந்த அடுப்பங்கரை மருந்து பூண்டு. நீங்கள் வயிற்று வலியால் அவதிப்படுகிறீர்கள் என்றால் சம அளவு பூண்டு சாறு, சோயா எண்ணெய் எடுத்து வயிற்று பகுதியில் மசாஜ் செய்ய வேண்டும். வயிற்றில் தடவிய எண்ணெய் தோல் மூலமாக உறிஞ்சப்படும். இது அஜீரணத்தை உடனடியாக நீக்கிவிடும்.

கொத்துமல்லி இலை

ஒரு கிளாஸ் தண்ணீரில் சிறிதளவு சீரகம், கொத்துமல்லி சாறு, உப்பு ஒரு சிட்டிகை ஆகியவற்றை கலந்து குடிக்கலாம். வயிற்று வலி ஏற்படின் இதை பருகலாம். மேலும் கொத்தமல்லி இலை இரண்டு தேக்கரண்டி, இஞ்சி சாறு ஒரு தேக்கரண்டி மூன்று ஏலக்காய், கிராம்பு கலந்து குடிக்கலாம். இது வாயு தொந்தரவை நீக்கிவிடும்.

22-ம் ஆண்டில் வெற்றிநடை போடும் முற்றம்

- சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட முற்றம் படியுங்கள்!
- முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட உங்களின் ஆதரவை தாருங்கள்!
- முற்றத்திற்கு சந்தா செலுத்திடுங்கள்!!

முற்றம் இதழின் சந்தா விபரம்

ஒரு ஆண்டு	ரூ. 200
இரண்டு ஆண்டு	ரூ. 400
மூன்று ஆண்டு	ரூ. 600

விளம்பரக் கட்டணம் (ஒரு இதழிற்கு)

அட்டையின் 2-வது பக்கம்	ரூ. 50,000
அட்டையின் 3-வது பக்கம்	ரூ. 50,000
அட்டையின் பின்பக்கம்	ரூ. 50,000
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 35,000

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை 'முற்றம்' (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம். சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும். பரிசும் வழங்கப்படும்.

விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:
மேலாளர், முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம், 3வது மாடி,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.

Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamilnadu Corporation for Development of Women's Ltd., Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd., New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029. Published from (91,000 Copies circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034. Editor : S. CHINNAPPAN

“ சமூக ஒருங்கிணைப்பு மூலம் வாழ்வாதார மேம்பாடு அடைய செய்தல் ”

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION

Empowering Lives

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் நகர்ப்புற ஏழை எளிய மக்கள், தெருவோர வியாபாரிகள் மற்றும் நகர்ப்புற வீடற்றோருக்காக பல்வேறு திட்டங்களை தீட்டி தமிழக அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருவது பெருமைக்குரியது.

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS. 344/2019
Reg.No. TN/CH/(C)/455/2018-2020 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2018-2020
Date of Publication : 1st Week of the every month

தொழில் முனைப்பில் வளர்ச்சி!
ஊரக மக்கள் மகிழ்ச்சி!

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் மூலமாக
2,37,576க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன் பெற்றுள்ளனர்.

வளமான மாற்றம், உயர்வான வாழ்க்கை!

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் (TNRTP)
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
5 ஆம் தளம், தமிழ்நாடு சிறுதொழில்கள் மேம்பாட்டுக் கழகம், திரு.வி.க தொழிற்பேட்டை, சென்னை - 600032.
(044) 434 43200 | tnrtpstate@gmail.com | www.tnrtp.org TNRTP tn_rtp tn_rtp